


# "மஹிந்த மஹத்தயாவுக்காகக் காத்திருத்தல்"

## 2018 உள்ளூராட்சித் தேர்தலின் தாத்பரியங்கள், பாடங்கள் மற்றும் நம்பிக்கை கெடுக்கப்பட்ட எதிர்பார்ப்புக்கள

விதுர பிரபாத் முனசிங்க

LAW & SOCIETY TRUST

# “மஹிந்த மஹத்தயாவுக்காகக் காத்திருத்தல்”:

## 2018 உள்ளூராட்சித் தேர்தலின் தாத்பரியங்கள், பாடங்கள் மற்றும் நம்பிக்கை கெடுக்கப்பட்ட எதிர்பார்ப்புக்கள்

சட்டம் மற்றும் சமூக நம்பிக்கை 2018

# “மஹிந்த மஹத்தயாவுக்காகக் காத்திருத்தல்”: 2018 உள்ளூராட்சித் தேர்தலின் தாத்பரியங்கள், பாடங்கள் மற்றும் நம்பிக்கை கெடுக்கப்பட்ட எதிர்பார்ப்புக்கள்

**மொழிபெயரிப்பு :** மொஹமட் பிக்குரி


**வெளியீடு**

LAW & SOCIETY TRUST

சட்டம் மற்றும் சமூக நம்பிக்கை
3 கின்சி டெரஸ்
கொழும்பு 00800,
இலங்கை
தொலைபேசி : +94 (0) 11 268 48 45
தொலைநகல் : +94 (0) 11 2686843
இணையத்தளம் : www.lstlanka.org

# “மஹிந்த மஹத்தயாவுக்காகக் காத்திருத்தல்”:

## 2018 உள்ளூராட்சித் தேர்தலின் தாத்பரியங்கள், பாடங்கள் மற்றும் நம்பிக்கை கெடுக்கப்பட்ட எதிர்பார்ப்புக்கள்[i]

விதுர பிரபாத் முனசிங்க[ii]

### அறிமுகம்

இலங்கையிலுள்ள 377 உள்ளூராட்சி அமைப்புக்களுக்கான உள்ளூராட்சித் தேர்தல் 2018 பெப்ரவரி 10 ஆம் திகதி நடைபெற்றது (எல்பிட்டிய பிரதேச சபை நீங்கலாக)[iii]. இத்தேர்தலும் அதன் முடிவுகளும் இரு பிரதான காரணங்களுக்காக விசேட கவனத்தினைப் பெறுகின்றன:

- உள்ளூர் மேட்டுக்குடியினருக்கும் அரசியல் கட்சிகளுடன் நெருங்கிய தொடர்பினைக் கொண்டுள்ளவர்களுக்கும் நன்மைகளை வழங்கிய விகிதாசாரத் தேர்தல் முறைமைக்குப் பதிலாக வட்டார அடிப்படையில் சமுதாய மட்டத் தலைவர்களினால் பிரதிநிதித்துவப்படுத்தப் படுகின்றதும் சமுதாயத்திற்கு வாய்ப்பினை வழங்குவதற்காக அறிமுகப்படுத்தப்பட்டதும் உள்ளூராட்சி அமைப்புக்களில் இதன் மூலம் பிரதிநிதித்துவ ஜனநாயகத்தினை வலுப்படுத்துவதற்காகக் கொண்டுவரப்பட்டதுமான புதிய தேர்தல் முறைமையின் கீழ் நடத்தப்பட்ட முதலாவது தேர்தல் இதுவாகும்.

- சிறிலங்கா பொதுஜன பெரமுன (SLPP) கூட்டு எதிர்க்கட்சி (JO) ஆகியவற்றின் தேர்தல் பிரச்சாரம் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் முன்னெடுக்கப்பட்டு தற்போதைய கூட்டமைப்பு அரசாங்கத்தின் பங்காளர்களை (அதாவது: இலங்கை சுதந்திர கட்சி (SLFP) / ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னனி (UPFA) மற்றும் ஐக்கிய தேசிய கட்சி மற்றும் ஐக்கிய தேசிய முன்னனி[iv]) தோற்கடித்து உள்ளூராட்சி அமைப்புக்களில் பாரிய வெற்றியினை ஈட்டியது.

- இக்கட்டுரையின் பிரதான குறிக்கோள் குறிப்பிட்ட உள்ளூராட்சித் தேர்தல் செயன்முறையினையும் அதன் பெறுபேறுகளையும் பரிசீலிப்பதும் புதிய தேர்தல் முறைமையினை அறிமுகப்படுத்துவற்கான பிரதான நோக்கம் அடையப்பட்டுள்ளதா என்பதை ஆராய்வதுமாகும். அதாவது, உள்ளூராட்சி அமைப்புக்களில் பிரதிநிதித்துவ ஜனநாயகத்தினை வலுப்படுத்துதல். இரண்டாம் நிலைக் குறிக்கோளாக தேர்தல் பிரச்சாரத்தின்போது வெளிப்படுத்தப்பட்ட பல்வேறு விதமான தாத்பரியங்களும் அதன் பெறுபேறுகளும் அடையாளங் காணப்படுகின்றன. மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக்காலத்தின்போது சர்ச்சைக்குரிய நிகழ்வுகள் இடம்பெற்ற நான்கு விடயங்களில் நான் என்னுடைய ஆய்வினை முன்வைக்க விரும்புகின்றேன்:

- உமா ஓயா கருத்திட்டத்தினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்கள்[v]: லியன்கஹவெல, மகுலெல்ல, எகொடகம, கிரிஒருவ, திகனதென்ன, மற்றும் தல்கொல்ல ஆகியன பண்டாரவளை பிரதேச சபையின் தேர்தல் வட்டாரங்களாகும். பின்துனுவெவ மற்றும் கினிகம ஆகியன பண்டாவளை மாநகரசபை பிரதேசங்களாகும். எல்ல பிரதேச சபையின் கீலோய, டோவ, எல்ல வலல்கட்டுவ மற்றும் தெமோதர ஆகிய பிரதேசங்கள்.

- ☐ அளுத்கமவில் முஸ்லிம்களுக்கு எதிரான வன்முறைகளினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்கள்[vi]: பேருவளை பிரதேச சபையிலுள்ள தர்கா நகர் தேர்தல் வட்டாரம்.
- ☐ பாணம காணி அபகரிப்பினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்கள்[vii]: பாணம மேற்கு, பாணம மத்தி, பாணம வடக்கு, பாணம தெற்கு ஆகியவற்றின் தேர்தல் வட்டாரங்களும் லாஹுகல பிரதேச சபையின் சாஸ்தரவெல பிரதேசமும் ஆகும்.
- ☐ மாசாக்கப்பட்ட குடிநீரினால் பாதிக்கப்பட்ட வெலிவேரிய ரதுபுஸ்வல பிரதேசங்கள்[viii]: ரதுபுஸ்வல நெடுனகமுவ மற்றும் வெலிவேரிய ஆகிய கம்பஹா பிரதேச சபையின் தேர்தல் வட்டாரங்களும் மஹர பிரதேச சபையின் சிவுரலுதென்னயும்.

## பிரச்சாரங்களில் அவதானிக்கப்பட்ட விடயங்கள்

தேர்தல் ஆணைக்குழு உள்ளூராட்சித் தேர்தலுக்கான திகதியினை 2017 நவம்பர் 01 ஆம் திகதி அறிவித்தது. மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் தனது தேர்தல் பிரச்சாரத்தினை ஆரம்பித்து வைத்த SLPP/JO அதன் முதலாவது பிரமாண்டமான தேர்தல் கூட்டத்தினை அநுராதபுரத்தில் அதே மாதம் 17 ஆம் திகதி நடத்தியது[ix]. அதன் பின்னர் இவ்வாறான பிரமாண்டமான கூட்டங்களை SLPP வெவ்வேறு இடங்களில் நடத்தியது. இவ்வாறான பிரமாண்டமான கூட்டங்களுடன் ஒப்பிடும்போது ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன[x] தலைமைதாங்கி நடத்திய சிறிய தேர்தல் பிரச்சாரங்கள் UPFA/SLFP இனால் ஏற்பாடு செய்யப்பட்டு 2018 ஜனவரி 10 ஆம் திகதி ஆரம்பித்தன[xi]. அதேவேளை, பிரதர் ரணில் விக்கிரமசிங்க பங்கேற்ற UNP/UNF இன் தேர்தல் பிரச்சாரங்கள் 2018 ஜனவரி 18 இல் ஆரம்பித்தன.[xii]

SLPP/JO இன் நிகழ்வுகளில் இத்தேர்தல் அரசாங்கத்தின் தற்போதைய நிலை தொடர்பான மக்கள் தீர்ப்பாக மாற்றப்பட வேண்டுமென்றும் அதன் மூலம் அரசாங்கத்தை கவிழ்ப்பதற்கான முதற்படியாக அது மாறவேண்டும் என்பதும் வலியுறுத்தப்பட்டன. இவர்களின் பிரச்சாரங்களில் "மஹிந்தவைப் பிதமராக்குவோம்" எனும் சுலோகத்தினை மீண்டும் மீண்டும் கேட்கக்கூடியதாக இருந்தது. SLPP/JO இன் தேர்தல் பிரச்சாரமானது ஒரு தேசிய தேர்தல் போன்ற தன்மையினைக் கொண்டதாக அமைந்திருந்தது. சம்பந்தப்பட்ட உள்ளூராட்சிப் பிரதேசங்களின் உள்ளூர் ரீதியாக முக்கியத்துவம் வாய்ந்த தேவைகள் இப்பிரச்சாரங்களில் மிக அரிதாகவே வெளிப்படுத்தப்பட்டன.



ரத்துபஸ்வல போராட்டத்திற்கெதிரான தாக்குதல் (2013 ஆகஸ்ட்) மூலம்: **https://www.newsfirst.lk/wp-content/uploads/2013/11/Rathupaswala-protest.jpg**

UPFA/SLFP அதன் பிரச்சராங்களின் பிரதான தலைப்பாகத் தேசிய மட்டப் பிரச்சினைகளை ஆக்கியிருந்தது. திறைசேரி முறி தொடர்பாக UNP இற்கு எதிராகத் தொடர்ச்சியான குற்றச்சாட்டுக்கள் ஜனாதிபதியினால் முன்வைக்கப்பட்டமை தேர்தல் பிரச்சாரத்தின்

பிரதான அம்சமாகக் காணப்பட்டது. UNP/UNF அதன் தேர்தல் கூட்டங்களின்போது SLF இனை பிரதிநிதித்துவப்படுத்தி நல்லாட்சி அரசாங்கத்தில் சேர்ந்துகொண்ட அமைச்சர்களை குற்றம் சாட்டியது. இவர்கள் ராஜபக்ஷ ஆட்சிக்காலத்தின்போது இழைக்கப்பட்ட குற்றச்செயல்கள் மற்றும் ஊழல்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படுவதற்குத் தடையாக இருந்ததாக குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டன.

இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடகங்கள் அவற்றின் நாளாந்தச் செய்திகளில் பிரதான அரசியல் கட்சிகளின் தேசிய மட்டப் பிரச்சினைகள் பற்றிய கருத்துக்களுக்கு பாரிய இடத்தினை ஒதுக்கியிருந்தன. எனவே, இந்தச் சூழலானது மக்களுக்கு ஒரு தேசிய தேர்தல் பற்றிய உணர்வினை ஏற்படுத்தியதேயன்றி உள்ளூராட்சி தேர்தல் பற்றிய உணர்வினையல்ல.

## களத்திலிருந்து பெற்றுக்கொண்ட அவதானிப்புக்கள்

மேலே குறிப்பிடப்பட்டுள்ள இடங்களுடன் தொடர்புபட்ட சகல பிரதான நகரங்களிலும் மஹிந்த ராஜபக்ஷ பங்குபற்றலுடன் SLPP/ JO பாரிய தேர்தல் கூட்டங்களை நடத்தியிருந்தது (உமா ஓயா தர்காநகர் பாணம மற்றும் வெலிவேரிய). உமா ஓயா பிரதேசத்துடன் தொடர்புடைய நகரத்தில் பாரிய கூட்டத்தினை நடத்திய ஒரேயொரு கட்சியாக SLPP/JO காணப்பட்டது (பண்டாரவளை). தேர்தல் கூட்டங்களில் மஹிந்த ராஜபக்ஷவும் கட்சியின் தேசிய மட்டத் தலைவர்களும் பிரதான பேச்சாளர்களாகப் பங்குபற்றினர். மேலும், சம்பந்தப்பட்ட உள்ளூராட்சித் தொகுதிகளில் போட்டியிட்ட வேட்பாளர்கள் பேசுவதற்கு அரிதாகவே வாய்ப்புக்களைப் பெற்றனர். குறிப்பாக தர்காநகர் வட்டாரத்திலே இந்நிலைமை மோசமாகக் காணப்பட்டது. இங்கு வட்டாரத்தினைப் பிரதிநிதித்துவப்படுத்திய 2 வேட்பாளர்களும் ஒட்டுமொத்தத் தேர்தல் பிரச்சாரத்தின்போது

பிரதேசத்தில் நடைபெற்ற எவ்விதமான சிறு கூட்டங்களில்கூட பேசுவதற்கு வாய்ப்பினைப் பெறவில்லை. இதற்கான அனைத்து வாய்ப்புக்களும் ரோஹித அபேகுணவர்தனவினாலும் பியல் நிசாந்த டி சில்வாவினாலும் பயன்படுத்தப்பட்டன. இவர்கள் இதே மாவட்டத்தில் SLPP/JO இற்கு ஆதரவளிக்கும் பாராளுமன்ற உறுப்பினர்களாவர்.

தேர்தல் பிரச்சாரத்தின்போது ஏனைய கட்சிகளுடன் ஒப்பிடும்போது SLPP/JO வீட்டுக்கு வீடான விஜயங்களின் மூலமாகவும் சிறு கூட்டங்களை நடத்துவதன் மூலமாகவும் சம்பந்தப்பட்ட வட்டாரத்திலுள்ள தமது வேட்பாளர்களைச் சமுதாயத்திற்கு அறிமுகப்படுத்துவதற்கும் மேலும் சமுதாய உறுப்பினர்களுடன் பேசுவதற்கும் குறைவான முயற்சிகளையே எடுத்திருந்தன. இவர்களின் பிரதான தேர்தல் பிரச்சார உபாய மார்க்கமானது பிரமாண்டமான கூட்டங்களின் மூலமாகவும் சுவரொட்டிப் பிரச்சாரங்களின் மூலமாகவும் மஹிந்த ராஜபக்ஷவின் பிம்பத்தினைக் கட்டியெழுப்புவதாகும். அக்கட்சியின் உள்ளூர் வேட்பாளர்கள் மக்களிடம் பேசுகையில் அவர்கள் வழங்குகின்ற வாக்கு முன்னாள் ஜனாதிபதிக்கு வழங்குகின்ற வாக்கு எனக்கருதி கட்சிக்கு வாக்களிக்குமாறு கோரியிருந்தனர்.

வாக்காளர்கள் இவ்வேண்டுகோளை ஏற்று இதற்கமையத் தேர்தலில் வாக்களித்தனர் என்பதைத் தெளிவாகக் காட்டுவதற்கான பல சம்பவங்கள் இடம்பெற்றன. உதாரணமாக எல்ல பிரதேச சபையின் டோவா தேர்தல் வட்டாரத்தைச் சேர்ந்த மக்கள் அவர்களது SLPP வேட்பாளர் ஒருவர் தேர்தலுக்கு முன்னர் பிரச்சார நடவடிக்கைகளின்போது இதய அடைப்பினால் இறந்திருந்தபோதிலும் அவரைத் தெரிவு செய்துள்ளனர். சில குறிப்பிட்ட பிரதேசங்களில் மஹிந்த ராஜபக்ஷவுக்கு யார் நெருக்கமானவர்கள் என்பதைக் காட்டுவதற்கான போட்டிகள் நிலவியிருக்கின்றன. பண்டாரவளை பிரதேச சபையிலே

சுயேட்சைக்குழு 2 இன் கீழ் போட்டியிட்ட டல்கொல்ல வட்டாரத்தின் வேட்பாளர் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் புகைப்படத்தினை “மஹிந்தவுடன்” என்று தலைப்பிட்டு சுவொரட்டி பிரச்சாரம் நடத்தியிருக்கின்றார். இவர் SLPP இன் உத்தியோகபூர்வ வேட்பாளரைவிட அதிக வாக்குகளைப் பெற்று வெற்றியடைந்திருக்கின்றார். மேலும், SLPP உள்ளடங்களாக ஏனைய சகல கட்சிகளையும் சேர்ந்த வேட்பாளர்களைத் தோற்கடித்து இவர் வெற்றியடைந்திருக்கின்றார். இதேவேளை, பாணமவைச் சேர்ந்த SLPP வேட்பாளர் ஒருவர் தொடர்ச்சியாகத் தனது பிரச்சாரத்திலே தான் மஹிந்த ராஜபக்ஷவின் தாய்வழி உறவுக்காரர் என்பதைக் குறிப்பிட்டு வந்திருக்கின்றார். பேருவளை பிரதேச சபையின் வலதர வட்டாரத்தைச் சேர்ந்த SLPP வேட்பாளர் ஒருவர் தேர்தல் பிரச்சாரத்தின்போது மஹிந்த ராஜபக்ஷவின் பங்குபற்றலுடன் ஏராளமான விருந்தினர்களுடன் பெரும் பணச் செலவில் தனது சகோதரியின் திருமனத்தினை நடத்தி வைத்தார்.

களப்பணி நடைபெற்ற 7 உள்ளூராட்சி அமைப்புக்களில் 6 இடங்கள் SLPP[xiii] இனால் வெற்றிக்கொள்ளப்பட்டன. இச்சூழ்நிலையினை UNP இன் பெண் வேட்பாளர் பின்வருமாறு விளக்கினார்:

> “ஏனைய கட்சிகளின் வேட்பாளர்கள் கிராமமட்ட சமுதாயத் தலைவர்கள். SLPP இனைச் சேர்ந்தவர்கள் முன்னாள் ஜனாதிபதியையே முன்வைத்திருந்தனர். எனவே, முடிவுகள் தெளிவானவையாக இருந்தன. எவ்வாறு ஒரு கிராமத் தலைவரினால் முன்னாள் ஜனாதிபதிக்கு எதிராகப் போட்டிப்போட முடியும்?”[xiv]

உள்ளூர் மட்டத்திலே துடிப்பான உள்ளூர் வாக்களர்களின் ஆதரவைப் பெற்ற நபர்களைத் தமது வேட்பாளர் பட்டியலில் உள்ளடக்குவதற்கு ஐக்கிய தேசியக் கட்சி கணிசமான முயற்சிகளை மேற்கொண்ட போதிலும் இதன் உண்மைத்

தன்மையிலே சில சந்தர்ப்பங்களில் சந்தேகங்கள் காணப்பட்டன. "பாணம்படுவாவை பாதுகாப்பதற்கான இயக்கத்தின்" பல தலைவர்கள் பாணம காணிப் போராட்டத்தின்போது மிகவும் அர்ப்பணிப்புடன் செயற்பட்டிருந்ததனால் இவர்களுக்கு UNP இனால் நியமனங்கள் வழங்கப்பட்டிருந்தன. ஆனால் இவர்களுள் பெரும்பான்மையானோர் வட்டாரங்களில் போட்டியிடுவதற்கு பதிலாக விகிதாசாரப் பிரதிநிதித்துவப் பட்டியலில் உள்ளடக்கப்பட்டிருந்தனர். பிரதேசத்திலே சமுதாயமட்ட ஆதரவினைக் கொண்ட தலைவர்களின் ஆதரவினைப் பெற்று வட்டாரத்திலிருந்து பாரம்பரிய கட்சி வேட்பாளர்களை வெற்றிபெறச் செய்வதற்கான ஓர் உபாயமார்க்கமாக இதனை நோக்க முடியும்.

ஹலன்னுகே மற்றும் லாஹுகல வட்டாரங்களில் தோல்வியடைந்த வேட்பாளர்களுக்கு விகிதாசாரப் பட்டியலிலிருந்து போனஸ் (பெற்றுக்கொண்ட மொத்த வாக்குகளின் எண்ணிக்கையில் ஒதுக்கப்படுவது) ஆசனங்களை ஐக்கிய தேசியக் கட்சி வழங்கியதிலிருந்து இந்நிலைப்பாடு தெளிவாகின்றது. இதன்போது பாணம வட்டாரங்களை (ஐக்கிய தேசிய கட்சி வெற்றிபெற்ற வட்டாரம்) சேர்ந்த கிராமத் தலைவர்களுக்கு போனஸ் ஆசனங்கள் வழங்கப்படவில்லை. இந்தப் பிரதேசத்தின் பிரதம அமைப்பாளர் வருகின்ற கிழக்கு மாகாணத் தேர்தலிலே இந்த வருடத்தின் பிற்பகுதியிலே[xv] தனது பிரச்சாரத்திற்கான ஏற்பாடுகளை மேற்கொள்வதற்காகவே ஹலன்னுகே மற்றும் லாஹுகல வட்டாரங்களின் விகிதாசாரப் பட்டியலிலுள்ள வேட்பாளர்களைத் தனது சுயநல நோக்கத்திற்காகப் பயன்படுத்தியிருக்கின்றார்.

கள ஆய்வு இடம்பெற்ற இடங்களில் 2 சந்தர்ப்பங்களின்போது தேசிய மட்டத்திலே கட்சிகளுக்கிடையில் உடன்படிக்கை ஏற்படுத்தப்பட்டு அது குழுத் தலைவர்களுக்கு வாய்ப்பினை வழங்குவதில் பாதகமான தாக்கத்தினை ஏற்படுத்திய நிகழ்வுகள் இடம்பெற்றன.

2015 ஆகஸ்ட் இல் நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தலைப் போன்றும் இந்தத் தேர்தலில் ஜாதிக ஹெல உறுமய UNP/ UNF உடன் சேர்ந்து போட்டியிட்டது. இந்த தேசியமட்ட உடன்படிக்கையின் காரணமாக சமுதாயத்தில் துடிப்பான மற்றும் மிகப்பிரபல்யமான இளைஞர்களுக்கு வாய்ப்பினை வழங்காமல் பாணமவினைச் சேர்ந்த, சமுதாய அடிப்படையற்ற JHU (ஜாதிக ஹெல உறுமய) உறுப்பினர் ஒருவருக்கு ஐக்கிய தேசிய கட்சியின் பட்டியலிலே நியமனத்தினை வழங்கவேண்டி ஏற்பட்டது. இந்த ஒரே காரணத்திற்காக ஐக்கிய தேசிய கட்சியினால் இலகுவாக வெற்றிபெற்றிருக்கக்கூடிய பாணம வடக்கு தேர்தல் வட்டாரமானது 10 மேலதிக வாக்குகளால் மாத்திரமே வெற்றி கொள்ளப்பட்டதாக உள்ளூர் தகவல் தெரிந்தவர் குறிப்பிட்டார்.[xvi]

இதேவேளை, ஜாதிக ஹெல உறுமயவின் தலைவரான பாட்டளி சம்பிக்க ரணவக்க பேருவளையில் நடைபெற்ற ஐக்கிய தேசிய முன்னனியின் தேர்தல் பிரச்சாரத்தில் பேச்சாளராகக் கலந்து கொண்டார். 2014 ஆம் ஆண்டு முஸ்லிம்களுக்கு எதிராக நடைபெற்ற தாக்குதல்களில் பெதுபலசேனா சம்பந்தப்பட்டமையினை இவர் நியாயப்படுத்தி இருந்தாரென தர்கா நகரில் வாழுகின்ற முஸ்லிம் சமுதாயத்தினர் உணர்ந்திருந்தனர் (ராஜபக்ஷ அரசாங்கத்தின்போது இவர் ஒரு முக்கியமான உறுப்பினராக இருந்தார்). அப்பிரதேசத்தைச் சேர்ந்த பல UNP ஆதரவாளர்கள் ஐக்கிய தேசியக் கட்சியின் மேடையில் ரணவக்க பங்குபற்றிய காரணத்தினாலேயே பல முஸ்லிம்கள் ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஆதரவாக வாக்களிப்பதிலிருந்து தவிர்ந்து கொண்டனரென அபிப்பிராயப்பட்டிருந்தனர்.[xvii]

## SLPP பின்னடைவுகள்

பண்டாரவளை பிரதேச சபையிலே (பதுளை மாவட்டம்) உமா ஓயா கருத்திட்டத்தினால் பாதிக்கப்பட்ட தேர்தல் வட்டாரங்களில்

(மஹிந்த ராஜபக்ஷ அரசாங்கத்தினால் ஆரம்பிக்கப்பட்டது). தல்கொல்ல தவிர்ந்த ஏனைய அனைத்து வட்டாரங்களிலும் SLPP வெற்றியீட்டியிருந்தது (மேலே பார்க்க / எவ்வாறாயினும் இது ராஜபக்ஷவின் விசுவாசியினால் வெல்லப்பட்டது). பிரதேச சபையின் எஞ்சியுள்ள வட்டாரங்களில் நயபெத்தேவத்த தவிர்ந்த ஏனைய அனைத்திலுமே SLPP வெற்றிபெற்றிருந்தது (கருத்திட்டத்தினால் பாதிக்கப்படாத பிரதேசங்கள்).

பண்டாரவளை மாநகர சபையில் SLPP அதன் சொந்தக் கட்சிச் சின்னத்தின் கீழ் போட்டியிடவில்லை. மாறாக அது SLFP உடனும் இலங்கை தொழிலாளர் காங்கிரசுடனும் சேர்ந்து கூட்டாக சுயாதீனக் குழுவினைக் களத்தில் இறக்கியது. இச்சுயாதீனக் குழுவானது மாநகர சபையின் சகல வட்டாரங்களிலும் வெற்றியீட்டியிருந்தது. எவ்வாறாயினும், உமா ஓயா நீர் மற்றும் நீர்ப்பாசனக் கருத்திட்டத்தினால் பாதிக்கப்பட்ட எல்ல பிரதேச சபையிலுள்ள 5 வட்டாரங்களில் 3 இல் SLPP தோற்கடிக்கப்பட்டிருந்தது. அவையாவன, எல்ல, பல்லக்கட்டுவ, மற்றும் தெமோதர என்பனவாகும்.

பேருவளை பிரதேச சபையில் 2014 ஆம் ஆண்டிலே சிங்கள பௌத்த அடிப்படைவாதிகளின் தாக்குதலுக்குள்ளான (முன்னைய அரசாங்கத்தின்போது) தர்காநகர் வட்டாரத்திலே SLPP தோல்வி கண்டது. எவ்வாறாயினும், வெலிபிட்டிய, மக்கொன மற்றும் மலேவன வட்டாரங்கள் தவிர்ந்த ஏனைய பேருவளை பிரதேசசபை வட்டாரங்களில் SLPP வெற்றிபெற்றது.

லாஹுகல பிரதேச சபையில் (அம்பாறை மாவட்டம்), பாணம காணி அபகரிப்பினால் (ராஜபக்ஷ அரசாங்கத்தின்போது ஆரம்பித்தது) மக்கள் பாதிக்கப்பட்ட 5 வட்டாரங்களில் பாணம மத்திய வட்டாரத்தில் மட்டுமே SLPP இனால் வெற்றிபெற முடிந்தது (UNP மூன்று SLFP ஒன்று). பாணம பிரதேசத்திலுள்ள

வட்டாரத்தினைத் தவிர எஞ்சிய லாஹுகல பிரதேச சபையைச் சேர்ந்த 6 வட்டாரங்களிலும் SLPP வெற்றிபெற்றது (இது காணி அபகரிப்புடன் பாதிக்கப்படவில்லை).

கம்பஹா பிரதேச சபையிலே (கம்பஹா மாவட்டம்), வெலிவேரிய குடிநீர்ப் பிரச்சினையினால் (மஹிந்த ராஜபக்ஷ ஆட்சிக் காலத்தின்போது) பாதிக்கப்பட்ட வட்டாரங்களில் SLPP அமோக வெற்றியீட்டியது. அதேவேளை, என்டரமுல்ல வட்டாரம் தவிர்ந்த ஏனைய அனைத்து வட்டாரங்களும் மஹர பிரதேச சபையில் SLPP இனால் வெற்றிகொள்ளப்பட்டன.

## பெறுபேறுகளை வாசித்தல்

மேலே விபரிக்கப்பட்டுள்ள தேர்தல் பெறுபேறுகளுக்கமைய வெலிவேரியவிலுள்ள ரதுபஸ்வலவில் இடம்பெற்ற குடிநீர்ப் பிரச்சினை மற்றும் அதனைத்தொடர்ந்து ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது மேற்கொள்ளப்பட்ட கொடூரமான தாக்குதல் சம்பவம் இடம்பெற்ற பிரதேசம் நீங்கலாக, பண்டாரவளை, பேருவளை மற்றும் லாஹுகல ஆகிய பிரதேசங்களில் SLPP நாட்டின் ஒட்டுமொத்த ரீதியாகப் பெற்றுக் கொண்ட பெறுபேறுகளுடன் ஒப்பிடுகையில் பாரிய வெற்றியினைப் பெற்றுக்கொள்ளத் தவறியுள்ளது. எனவே, மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாக இருந்த காலத்தில் இடம்பெற்ற தீங்குகளுக்கு மக்கள் இப்பொழுதும் மனதிலே கோபங்கொண்டவர்களாக இருப்பதையே களக் கணிப்பீடுகள் காட்டுவதாக ஊகிக்க முடியும்.


எவ்வாறாயினும் உள்ளார்ந்ததாக இருக்கின்ற யதார்த்தத்தினைப் புரிந்துகொள்ளும் முகமாக SLPP தோல்வி அடைந்த வட்டாரங்களின் இனத்துவ ஆக்கக்கூறுகளை நாங்கள் பார்க்க வேண்டும். பண்டாரவளை பிரதேச சபையில் SLPP தோல்வியடைந்த நயபெத்தவத்த வட்டாரத்தின் மக்கள்

தொகையின் பெரும்பான்மையானோரும் எல்ல பிரதேச சபையின் எல்ல, பல்லக்கட்டுவ மற்றும் தெமோதர வட்டாரங்களிலுள்ள மக்களில் பெரும்பான்மையானோரும் மலைநாட்டுத் தமிழர்களாவர் (இவர்கள் 2015 ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலின்போதும் மேலும் 2015 ஆகஸ்ட் பாராளுமன்றத் தேர்தலின்போதும் முறையே மைத்திரிபால சிறிசேனவுக்கும் ஐக்கிய தேசியக் கட்சிக்கும் வாக்களித்தவர்களாவர்). இதேபோன்று, பேருவளை பிரதேச சபையிலே SLPP தோல்வியுற்ற தர்காநகர் வட்டாரம், வெலிவிட்டிய வட்டாரம், மக்கொன வட்டாரம் மற்றும் மலேவன வட்டாரங்களில் பெரும்பான்மையினராக முஸ்லிம் மக்கள் காணப்படுகின்றனர். இச்சிறுபான்மை சமுதாயம் 2015 ஆம் ஆண்டிலும் முன்னைய அரசாங்கத்தினை எதிர்த்தது. இதேபோன்று, மஹர பிரதேச சபையிலே SLPP தோல்வியடைந்த ஒரெயொரு வட்டாரமான என்டெரமுல்ல வட்டாரத்திலும் சிங்கள மக்கள் மிகக் குறைவான எண்ணிக்கையிலே வாழ்கின்றனர் (இது முஸ்லிம் பெரும்பான்மை தேர்தல் தொகுதியாகும்).

தேர்தலின்போது முஸ்லிம் மக்களும் தமிழ் மக்களும் தீர்மானகரமான சக்திகளாக விளங்குகின்ற பண்டாரவளை மாநகர சபையில் SLPP / SLFP மற்றும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் ஆதரவு வழங்கிய சுயாதீனக் குழு வெற்றி பெற்றுள்ளது (SLFP மற்றும் தொழிலாளர் காங்கிரஸ் வேட்பாளர்களுக்கு ஆதரவான சிங்களச் சமுதாயம் சாராத மக்களின் வாக்குகளைப் பெற்றுக்கொள்ளுதல்). தற்பொழுது இச்சுயாதீனக் குழுவின் தலைவர் மஹிந்த ராஜபக்ஷவின் உறுதியான ஆதரவாளராக மாறியுள்ளார். மேலும், இவர் UNP உறுப்பினராகவும்[xviii] 20 வருடங்களாக மேயர் பதவியினையும்[xix] வகித்தவராவார். இக்குழப்பமான சூழ்நிலையினை விளக்குவதற்கு, இச்சுயாதீனக் குழுவானது SLPP இன் உத்தியோகபூர்வ வேட்பாளர்களைக் கொண்ட குழுவல்ல. எனவே, மஹிந்த ராஜபக்ஷ உரையாற்றிய பண்டாரவளை நகர

சபையில் நடைபெற்ற SLPP தேர்தல் பிரசாரத்தில் இவர்களின் வேட்பாளர்கள் எவருமே பங்குபற்றவில்லை. மேலும், சுயாதீனக் குழுவிற்கு வாக்களிக்குமாறு முன்னாள் ஜனாதிபதியும் அழைப்பு விடுக்கவில்லை. அவரின் ஆதரவாளர்கள் சிலர் அந்த சுயாதீனப் பட்டியலில் போட்டியிட்டும்கூட அவர் அவ்வாறான வேண்டுகோளை விடுக்கவில்லை.

பாணமையில் இடம்பெற்ற காணி அபகரிப்பு பிரச்சினையுடன் சம்பந்தப்பட்ட 5 வட்டாரங்களிலும் வாழுகின்ற லாஹுகலைப் பிரதேச சபையைச் சேர்ந்த பெரும்பான்மையானோர் சிங்கள மக்களென்பது உண்மையாகும். இருப்பினும் 5 வட்டாரங்களில் 4 வட்டாரங்களில் SLPP தோல்வியடைந்திருக்கின்றது. எவ்வாறாயினும், இப்பெறுபேறுகளை இப்பிரிவிலே இடம்பெற்ற முன்னைய தேர்தல்களின் சூழமைவிலேயே அர்த்தப்படுத்த



தர்கா நகரில் பௌத்த இனவாதிகளால் முஸ்லிம்களுக்குச் சொந்தமான வியாபார நிலையங்கள் தீக்கரையாக்கப்பட்டுள்ளன. 2014 ஜூன்) மூலம்: **https://www.colombotelegraph.com/wp-content/uploads/2014/06/Aluthgama.jpg**

வேண்டும். பாரம்பரியமாக இப்பிரதேசமானது ஐக்கிய தேசியக் கட்சியின் ஒரு கோட்டையாகக் காணப்பட்டு 2011 ஆம் ஆண்டு உள்ளூராட்சித் தேர்தலில் சகல வட்டாரங்களிலும் வெற்றிபெற்றிருக்கின்றது. இத்தடவை 3 வட்டாரங்களிலேயே இது வெற்றிபெற்றிருப்பதுடன் ஒரு வட்டாரத்திலே UPFA மற்றுமொரு வட்டாரத்திலே SLPP வெற்றி பெற்றிருக்கின்றன. பாணம மக்களின் கருத்துப்படி SLPP பெறுபேறுகள் ஒரு பின்னடைவல்ல. ஆனால் முன்னைய UNP கோட்டையிலே இவர்களுக்குக் கிடைத்த ஒரு முன்னேற்றமென்றே அதனைக் குறிப்பிட வேண்டும்.

> "இந்த வட்டாரத்திலே ஐக்கிய தேசிய கட்சி பாரிய பெரும்பான்மையுடன் வெற்றிபெறுமென நாம் நினைத்திருந்தோம். எவ்வாறாயினும், அவர்கள் 10 வாக்குகளாலேயே வெற்றி பெற்றிருக்கின்றனர். அதிகமான மக்கள் எதிர்பார்த்ததைவிட மஹிந்தவுக்கே வாக்களித்திருந்தனர்"[xx]

பல்லின மக்கள் கொண்ட தொகுதிகளில் SLPP அதன் தேர்தல் பிரச்சாரத்தினை நடத்திய விதம் சிங்களச் சமுதாயங்களல்லாத சமுதாயங்களில் வெற்றி பெறுவது கடினம் என்பதை அது உணர்ந்துள்ளது என்பதையே காட்டுகின்றது. உதாரணமாக, முஸ்லிம்கள் எண்ணிக்கையில் பெரும்பாண்மையாக வாழும் தர்காநகர் போன்ற வட்டாரங்களில் அதிக வாக்குகளைப்பெற முயற்சிக்காது பெரும் அளவில் சிங்களப் பெரும்பான்மை வட்டாரங்களை வெல்ல SLPP கைக்கொண்ட உபாயமார்க்கத்தினைக் குறிப்பிடலாம்.

சிங்களப் பெரும்பான்மை வட்டாரங்களின் தேர்தல் பிரச்சாரங்களின் போது SLPP அரசாங்கத்தினைச் சிறுபான்மை மக்களின் ஆதரவுடன் ஆட்சிக்கு வந்த அரசாங்கம் எனவும் அதனால் அது பெரும்பான்மை மக்களைக் கவனிக்காது சிறுபான்மை மக்களின் தாளத்திற்கு

ஆடுகின்ற அரசாங்கம் எனவும் குறைகூறியதைக் காணக்கூடியதாக இருந்தது. சமுதாயத்தின் இழந்த மேலாண்மையினை மீண்டும் கைப்பற்ற மஹிந்தவினைப் பலப்படுத்துங்கள் என்றே SLPP சிங்களப் பெரும்பான்மை மக்களுக்கு வேண்டுகோள் விடுத்தது.

## ஜனதா விமுக்தி பெரமுனவும் பண்டாரவளைப் பிரச்சாரமும்

பாதிக்கப்பட்ட பிரதேசத்தினைச் சேர்ந்த செயற்படுனர்களின் ஆதரவுடன் "உமா ஓயா பல் அழிவுக் கருத்திட்டத்திற்கெதிரான மக்கள் முன்னனி" என்கின்ற இயக்கத்தினை மக்கள் விடுதலை முன்னனி உருவாக்கியிருந்தது. பண்டாரவளை நகரையே ஸ்தம்பிக்க வைத்த ஹர்த்தால் உள்ளடங்கலாக பல வெற்றிகரமான ஆர்ப்பாட்டங்கள் இந்த இயக்கத்தினால் முன்னெடுக்கப்பட்டதுடன் இதன் காரணமாக பிரச்சினையில் மத்தியஸ்தம் செய்ய ஜனாதிபதியே நேரடியாகத் தலையிடவேண்டியிருந்தது.

2018ஆம் ஆண்டு உள்ளூராட்சித் தேர்தலின்போது இந்த இயக்கமானது பண்டாரவளை பிரதேச சபை மற்றும் பண்டாரவளை மாநகர சபையில் ஒரு சுயாதீனக் குழுவாகப் போட்டியிட்டது. பெரும்போக்கு அரசியல் கட்சிகள் தேசியமட்ட அதிகார அரசியல் மற்றும் தேவைகளில் கவனம் குவித்து பிரச்சாரம் மேற்கொண்டதைப் போலல்லாது JVP எடுத்த நிலைப்பாடானது பிரதேச மக்களின் இன்றியமையாத பிரச்சினைகளை கோடிட்டுக் காட்டுவதாக அமைந்தது. இப்பிரச்சாரத்திலே இவர்கள் உமா ஓயா கருத்திட்டம் இம்மக்களின் வீடுகளிலும் காணிகளிலும் வாழ்வாதாரங்களிலும் நீர் விநியோகத்திலும் ஏற்படுத்திய அழிவு தரும் விளைவுகளை கோடிட்டுக் காட்டினர்.

மேலும், மக்கள் முன்னனியானது இரண்டு உள்ளூராட்சி அமைப்புக்களுக்கான உள்ளூர் அபிவிருத்தித் திட்டத்தினையும் சமர்ப்பித்தது. இந்த இயக்கத்திற்கு மக்கள் விடுதலை முன்னனி

தெளிவாக ஆதரவு வழங்கியிருந்தபோதிலும் நியமனங்களைச் சமர்ப்பித்தபோது போட்டியிடுவதற்கான வாய்ப்புக்கள் JVP இற்கு இடையிலும் JVP இன் சொந்த ஆதரவாளர்களுக்கு இடையிலும் JVP இன் சாதாரண தலைவர்களுக்கிடையிலும் சமமாகப் பிரிக்கப்பட்டன. தேர்தல் பிரச்சாரத்தின்போது



பண்டாரவளை பிரதேசத்தில் தாழிறங்கப்பட்ட வீடொன்றின் இன்றைய நிலை (2018 மார்ச்)

பாரிய அளவிலான தேர்தல் கூட்டங்கள் இடம்பெறவில்லை. இவர்களின் அணுகுமுறையானது தமது எதிர்காலத் திட்டங்களை வீட்டுக்கு வீடாகச் சென்று மக்கள் மத்தியில் விளக்கி விழிப்புணர்வூட்டுவதாகவும் வெவ்வேறு இடங்களில் சிறு சிறு கூட்டங்களை நடத்துவதாகவும் அமைந்திருந்தது. நாடு முழுவதும் JVP தேர்தல் கூட்டங்களை நடத்தியபோதிலும் எதுவுமே பண்டாரவளையில் ஏற்பாடு செய்யப்படவில்லை. மாறாக சுயாதீனக் குழு அதன் உபாய மார்க்கத்தைப் பற்றிச் சுயமாகச் சிந்தித்து சமுதாய வலையமைப்புக்களைப் பயன்படுத்தி பிரச்சாரத்திலே ஈடுபட்டது.[xxi]

எவ்வாறாயினும், சில நபர்கள் சுயாதீனக் குழுவின் சிறு கூட்டங்களிலே பேச்சாளர்களாகப் பங்குபற்றி முரண்பாடுமிகு கருத்துக்களை தெரிவித்திருந்தனர். சுயாதீனக் குழுவுக்கு அளிக்கப்படுகின்ற ஒவ்வொரு வாக்கும் JVP இற்கான வாக்கென ஒரு துறவி தெரிவித்திருந்தார். இவ்வாறான கூற்றுக்கள் சுயாதீனக் குழு தொடர்பான JVP இன் அணுகுமுறையில் சாதகமான மாற்றத்தினைக் கீழறுத்தன. உண்மையிலேயே பண்டாரவளையில் JVP கைக்கொண்ட அணுகுமுறையானது உள்ளூராட்சி மட்டத்திலே பிரதிநிதித்துவ ஜனநாயகத்தினை மேம்படுத்தும் வகையாக மெச்சப்படல் வேண்டும். JVP எடுத்த இந்தத் தனித்துவமான நடவடிக்கை வேறு இடங்களிலும் மக்களுக்கு ஆர்வத்தினை ஏற்படுத்தி பண்டாரவளை பிரதேச சபையில் பெரும்போக்கு அரசியல் கட்சிகளுக்கு எதிரான வெற்றிக்கான எதிர்பார்ப்பினை ஏற்படுத்தியிருந்தது. துரதிஸ்டவசமாக இந்த எதிர்பார்ப்பு தேர்தல் பெறுபேறுகளில் பிரதிபலிக்கவில்லை. பண்டாரவளை பிரதேச சபையில் SLPP பெரும் வெற்றியினை ஈட்டியது.[xxii] எனவே புதிய தேர்தல் முறைமையானது உள்ளூர் மக்களின் அபிலாசைகளை அனுமதித்து உள்ளூர் மக்கள் உள்ளூராட்சியிலே முன்னனிக்கு வருவதற்கான வாய்ப்பினை வழங்குகின்றது என்பதில் நம்பிக்கை வைத்திருந்தோருக்கு இப்பெறுபேறுகள் பேரிடியாக அமைந்திருந்தன.

## மஹிந்த மஹதயாவுக்காக காத்திருத்தல்

SLPP அதன் தேர்தல் பிரச்சாரத்தின்போது மக்களிடம் இந்தத் தேர்தலினை கூட்டமைப்பு அரசாங்கத்திற்கு எதிர்ப்பினை வெளிப்படுத்துவதற்கான வாய்ப்பாகப் பயன்படுத்துமாறு மீண்டும் மீண்டும் கோரியிருந்தது. மேலும் மஹிந்த ராஜபக்ஷவினை மீண்டும் அதிகாரத்திற்குக் கொண்டு வருவதற்கான முதலாவது நகர்வினை உருவாக்குமாறும் மக்களிடம் கோரியிருந்தது.

கள ஆய்வு மேற்கொள்ளப்பட்ட நான்கு இடங்களிலிருந்து கிடைத்த தேர்தல் பெறுபேறுகளை நோக்கும்போது அதிகமான மக்கள் தற்போதை அரசாங்கத்தின் மீதான அவர்களின் அதிருப்தியினை வெளிப்படுத்துவதற்கு இந்தச் சந்தர்ப்பத்தினைப் பயன்படுத்தியிருப்பது தெளிவாகத் தெரிய வருகின்றது. இவ்வாறான அதிருப்திக்கான பல காரணங்கள் காணப்படுகின்றன.

பாணமையிலுள்ள மக்கள் அவர்களுடைய காணிகளை மீண்டும் வழங்குமாறு கோரிய கோரிக்கைக்கு தற்போதைய அரசாங்கம் எவ்விதமான தீர்வுகளையும் வழங்குவதற்குத் தவறியுள்ளமையினால் இம்மக்கள் அதிருப்தியுற்றுள்ளனர். அரசாங்கம் மாறியதன் பின்னர் ஐக்கிய தேசிய கட்சியின் சக்தி வாய்ந்த அமைச்சரொருவர் தமது காணிகளில்[xxiii] உத்தேச ஹோட்டல் கருத்திட்டத்தினைத் தொடர்வதற்குத் திட்டமிடுவதாக இம்மக்கள் குற்றம் சாட்டியிருந்தனர்.

2014 ஆம் ஆண்டிலே நடைபெற்ற தாக்குதல்களுக்குப் பொறுப்பான சிங்கள பௌத்த நாசகாரர்களைச் சட்டத்தின் முன்கொண்டு வருவதற்குத் தற்போதைய அரசாங்கம் தவறியுள்ள காரணத்தினால் தர்காநகர் மக்களும் விரக்தியடைந்துள்ளனர்.[xxiv]

2015ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தல் பிரச்சாரத்தின்போது தற்போதைய ஜனாதிபதி வெலிவேரியவுக்கு விஜயம் செய்து அந்த மக்களின் சகல பிரச்சினைகளையும் தீர்ப்பதாக வாக்குறுதியளித்து இப்பொழுது அந்த வாக்குறுதியை மீறியுள்ள காரணத்தினால் வெலிவேரிய மக்கள் கோபமுற்றிருக்கின்றனர். சனாதிபதி இதுவரையில் எவ்விதமான சாதகமான இடையீட்டினையும் மேற்கொள்வதற்குத் தவறியுள்ளார். மேலும், நீர் மாசடைவதற்கு பொறுப்பான கம்பனிக்கு எதிராகக் கிராம மக்கள் தாக்கல் செய்துள்ள வழக்குகள் தொடர்பாகவும் எவ்வித நடவடிக்கைகளையும் அவர் எடுக்கவில்லை.[xxv]

பண்டாரவளையிலே உமா ஓயா கருத்திட்டத்தினால் பாதிக்கப்பட்ட மக்கள் அழிவு தரும் கருத்திட்டம் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற காரணத்தினால் தற்போதைய அரசாங்கத்திலே கோபமுற்றிருக்கின்றனர். இக்கருத்திட்டம் ராஜபக்ஷ அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்பட்டபோதிலும் 2014ஆம் ஆண்டு முடிவின்போது 20% கருத்திட்டமே பூர்த்தியாக்கப்பட்டிருந்தது. எஞ்சியுள்ள கருத்திட்டப் பணிகள் தற்போதைய அரசாங்கத்தினால் அமுல்படுத்தப்பட்டு வருகின்றன.

மேலும், 2015ஆம் ஆண்டிலே அரசாங்கம் மாறியதன் பின்னர் சுரங்கம் தோண்டும் பணிகளைத் திடீரென நிறுத்திய காரணத்தினாலே அதிகமான சேதங்கள் ஏற்பட்டிருப்பதாகவும் குடிமக்கள் முறைப்பாடு செய்துள்ளனர் (முன்னைய அரசாங்கத்துடன் தொடர்புடைய சகல அபிவிருத்திக் கருத்திட்டகளும் இடைநிறுத்தப்பட்டன). தற்போதைய அரசாங்கம் சுரங்கத்தினுள்ளே இடம்பெறுகின்ற நீர்க் கசிவினை நிறுத்துவதற்கு உடனடியான நடவடிக்கைகளை எடுக்கத் தவறியுள்ளதாகவும் மக்கள் நம்புகின்றனர்.[xxvi] மேலும், வெடிப்புற்றுள்ள மற்றும் சேதமுற்றுள்ள வீடுகளுக்கான நட்டஈட்டுக் கொடுப்பனவுகள் தொடர்பாகவும் மக்கள் அதிருப்தியுற்றுள்ளனர், மேலும், பயிர்ச் செய்கைகள் நாசமுற்றிருப்பதற்கான நட்டஈடு தொடர்பாகவும் அரசாங்கம் வழங்கும் உரமானியத்திலே ஏற்படுத்தப்பட்டுள்ள குறைப்புக் காரணமாகவும் மக்கள் அதிருப்தியுற்றிருப்பதுடன் இவையாவுமே தற்போதைய அரசாங்கத்தின் அரசியல் அனுகூலமின்மைக்கான பிரதான காரணிகளாக மாறியுள்ளன. தொகுத்துக் கூறுவதாயின் தமது பிரச்சினைகளுக்கு நடைமுறைச் சாத்தியமிகு தீர்வுகளை வழங்குவதற்கு கூட்டமைப்பு அரசாங்கம் தவறியுள்ளமையினாலேயே மக்கள் தமது அதிருப்தியினை வெளிப்படுத்தி வருகின்றனர்.

இருப்பினும், இதிலே புதிராகக் காணப்படுவது என்னவென்றால் ஆய்வு மேற்கொள்ளப்பட்ட நான்கு இடங்களிலும் மக்கள் அரசாங்கத்தின் செயற்பாடுகள் மற்றும் செயற்பாடின்மைகள் காரணமாக மகிழ்ச்சி அற்றிருக்கின்ற அதேவேளை தமது பிரச்சினைகளுக்கு மேலும் பிரச்சினைகளைச் சேர்க்கின்ற அல்லது தமது பிரச்சினைகளை ஆரம்பித்து வைத்த நபர்களுக்குச் சார்பாகவே அவர்கள் வாக்களித்திருக்கின்றனர்.

எமது நேர்காணல்களின் மூலம் வெளிப்படுத்தப்பட்ட விடயம் என்னவெனில், பெரும்பான்மையான மக்கள் மஹிந்த ராஜபக்ஷ தமக்குச் சிறந்த தீர்வுகளைக் கொண்டு வருவார் என்கின்ற அவரின் ஆற்றலிலே நம்பிக்கையற்று இருப்பதுடன் அவரை மீண்டும் கொண்டுவருவதிலும் ஆர்வமற்றவர்களாக இருக்கின்றனர் என்பதேயாகும். மாறாக தமது வாழ்விலே அர்த்தபூர்வமான



பாணம பிரதேசத்தில் பாதுகாப்பு படையினரால் கைப்பற்றப்பட்ட காணிகளில் அமைக்கப்பட்டுவரும் நிர்மாணிப்புகள் (2010 ஜூலை) மூலம்: **https://janarala.files.wordpress.com/2013/05/paanaama.jpg**

மாற்றத்தினைக் கொண்டுவரத் தவறிய அரசாங்கத்தின் இடத்திற்கு பாதகமான மாற்றமாக இருந்தபோதிலும்கூட ஒரு எளிய மாற்றத்தினைக் கொண்டுவரவே மக்கள் எதிர்பாக்கின்றனர் என்பதே இதன் அர்த்தமாகும். மக்கள் இந்த முடிவினை எடுப்பதற்கான காரணம் அவர்கள் மஹிந்த ராஜபக்ஷவினை ஓர் உறுதியான தலைவராகவும் சர்வதிகாரப் பண்புமிக்கவராகவும் செயற்பாட்டின்பால் நாட்டம் கொண்டவராகவும் பார்க்கின்றமையினாலேயே ஆகும். அவரது ஆதரவாளர்கள் அவரை "யுத்தத்தை வென்ற நாயகன்" என்ற பிம்பத்துடன் அடிக்கடி இணைக்கின்றமையும் இதற்கான ஒரு காரணமாகும்.

கள ஆய்வு நடத்தப்பட்ட இடங்களிலுள்ள மக்கள் 2018 உள்ளூ ராட்சித் தேர்தல்களின்போது மஹிந்த ராஜபக்ஷவின் பிரச்சாரம் தொடர்பாகக் காட்டிய புலனுணர்வுகளையும் அவர்களின் சிந்தனைகளையும் கீழே வழங்கப்பட்டுள்ள மேற்கோள் வெளிப்படுத்துகின்றது:

> "இந்த அரசாங்கம் எதனையும் செய்யவில்லை. இப் பிரச்சினைகளை எல்லாம் தீர்க்கக்கூடிய ஒரேயொருவர் மஹிந்த மஹத்தயாதான். இப்பிரச்சினைகளை உருவாக்கியவரும் அவர்தான் (இராணுவத்தினரால் காணி அபகரிக்கப்பட்டமை). மேலும் அவர் ஒருவரால்தான் இப் பிரச்சினையைத் தீர்க்க முடியும். அவரால் இதைத் தீர்க்க முடியாவிட்டால் நாங்கள் எங்களுடைய போராட்டங்களை கைவிட்டுவிட்டு இதனையெல்லாம் மறந்துவிடுவோம். குறைந்தது அது எமது துயரங்களுக்கெல்லாம் ஒரு முடிவாகவிருக்கும்".
>
> - **பாணமையில் தனது காணியை இழந்த ஒருவர்**[xxvii].

> "மஹிந்த மஹத்தயா அறிவுறுத்திய காரணத்தினால்தான் தொழிற்சாலையை வேறு இடத்திற்கு மாற்ற வேண்டியிருந்தது (கையுறை தயாரிக்கும் தொழிற்சாலை).

இல்லாவிட்டால் அது மாற்றப்பட்டிருக்காது. நாம் தாக்கப்பட்டோம். ஆனால், பின்னர் ராஜபக்ஷதான் அதற்கு பொறுப்பானவர்”.

**- வெலிவேரிய கிராமத்தவர்கள்.**[xxviii]

“இச்சந்தர்ப்பத்தில்கூட நான் மைத்திரிபால சிறிசேனவுக்குத்தான் வாக்களித்தேன். அதற்கான காரணம் நாங்கள் நீர் மாசடைந்தமைக்காக ஆர்ப்பாட்டம் செய்யும்போது தாக்கப்பட்டோம். எவ்வாறாயினும், யுத்தத்தினை முடித்ததற்காக மஹிந்தவை மதிக்கின்றேன்”.

**- சியன சுற்றுச்சூழல் பாதுகாப்பு இயக்கத்தின் தலைவர்**[xxix].

“தொழிற்சாலைக்கான எமது போராட்டமானது அரசியல் போராட்டமல்ல. தொழிற்சாலை 1994 இல் நிர்மாணிக்கப்பட்டது. நாங்கள் அடிக்கடி எமது துயரங்களை எடுத்துக்கூறினோம். ரெஜி ரணதுங்க மஹத்தயாதான் (கம்பஹா மாவட்ட **SLFP** தலைவர்) அந்த நாட்களில் எங்களுக்கு ஆதரவு வழங்கினார். அதன் பின்னர் பிரசன்ன ரனதுங்கவும் எங்களுக்கு ஆதரவு வழங்கினார். நாம் தாக்கப்பட்டோம் என்பது உண்மை. ஆனால் நட்டஈடு வழங்கப்பட்டது. மஹிந்த மஹத்தயாதான் தானாகவே பிரச்சினையைத் தீர்த்துவைத்தார்”.

**- சியன சுற்றுச்சூழல் பாதுகாப்பு இயக்கத்தின் செயற்படுநர்**.[xxx]

“மஹிந்த மஹத்தயா சுரங்கத்தைத் தோண்டிய காரணத்தினால் எங்களுக்கு ஏதோ கொஞ்ச நட்டஈடு கிடைத்தது”. உமாஓயா கருத்திட்டத்தினால் சேதமாக்கப்பட்ட சொத்துக்களுக்காக).

**- கொலத்தன்ன கிராமத்தவர் பண்டாரவளை**[xxxi].

## முடிவு

உள்ளூராட்சி அதிகார சபைகள் தேர்தல்கள் (திருத்தம்) சட்டத்திற்கு ஒப்புதல் அளிப்பதற்காக கருஜயசூரிய, பாராளுமன்ற சபாநாயகர், கையொப்பம் இடும்போது 2017 ஒக்டோபரிலே ஊடகத்தினரிடம் தெரிவிக்கையில், "இப்புதிய தேர்தல் முறைமையின் முக்கியமான அம்சம் வாக்காளர்களுக்கு அவர்களது பிரதேசத்தின் பிரதிநிதியைத் தெரிவு செய்தவற்கான நேரடியான வாய்ப்பினை வழங்குவது என்றும் எனவே இது பிரதிநிதித்துவ ஜனநாயகத்தினை உள்ளூர் மட்டத்திற்குக் கொண்டுவருவதில் ஓர் இன்றியமையாத படி" எனவும் குறிப்பிட்டார்.[xxxii]

குறிப்பிட்ட புதிய தேர்தல் முறைமையின் கீழ் உள்ளூராட்சித் தேர்தல்கள் நடத்தப்பட்ட பின்னர் பாராளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்தன (இலங்கை பொதுஜன பெரமுன கூட்டு எதிர்க் கட்சியின் ஆதரவாளர்) பத்திரிகை மாநாட்டில் குறிப்பிடுகையில், "இவ்வெற்றியானது முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு கிடைத்த வெற்றி" என்று குறிப்பிட்டார். அவர் மேலும் குறிப்பிடுகையில், "SLPP இனால் தேங்காய்மட்டை ஒன்றை உள்ளூராட்சி வேட்பாளாக நியமித்திருந்தால்கூட மஹிந்த ராஜபக்ஷவின் கவர்ச்சியினால் அது வென்றிருக்கும்" எனக் குறிப்பிட்டார். இக்கூற்றானது மிக நீண்டகாலமாகப் பல முயற்சிகளை மேற்கொண்டு உருவாக்கிய புதிய தேர்தல் முறைமையானது பிரதிநிதித்துவ ஜனநாயகத்தினை வலுப்படுத்தத் தவறியுள்ளமையினையே தெளிவாகச் சுட்டிக்காட்டுகின்றது. இந்நாட்டின் அரசியல் கட்சிகள் தேர்தல் செயன்முறையில் செயற்பட்ட விதமானது அவர்கள் இந்த எதிர்பார்ப்புக்களைத் திசை திருப்புவதற்கு நடவடிக்கைகள் எடுத்துள்ளனர் என்பதேயாகும். இது தொடர்பில் பொதுஜன ஊடகங்களும் பாரிய பங்களிப்பினை வழங்கியுள்ளன.

எதிர்காலத்திலே ஆட்சி அதிகாரத்தினைப் பிடிப்பதற்கு எண்ணியுள்ள SLPP சிங்கள வாக்காளர் தளத்திலே நம்பிக்கை வைத்துள்ளமையினையே இத்தேர்தல் பெறுபேறுகள் வெளிக்காட்டியுள்ளன. மேலும் மஹிந்த ராஜபக்ஷ சிங்கள இனத்தினைச் சாராத சமுதாயத்தினருக்கு கவர்ச்சியானவரல்ல என்பதையும் தேர்தல் பெறுபேறுகள் நிரூபித்துள்ளன. சிங்கள மக்கள் மஹிந்த ராஜபக்ஷவினைத் தெரிவு செய்ததற்கான காரணம் அவரிடமிருந்து அவர்கள் எப்பொழுதும் நல்ல விடயங்களினையும் நீதியினையும் எதிர்பார்க்கின்றனர் என்பதல்ல. ஆனால், அவர் பலவீனமான, நடுங்குகின்ற கூட்டமைப்பு அரசாங்கத்திற்கு எதிரான ஓர் உறுதியான மற்றும் தீர்மானகரமான சக்தியாக இருக்கின்றார் என்பதனாலாகும்.

எனவே, தற்போதைய சூழ்நிலையின் மிக மோசமான அதிருப்தியின் சிக்கலான வெளிப்பாடாக 2019/20 இல் மக்கள் அடைவதற்கு எதிர்பார்க்கின்ற அரசியல் மாற்றத்தினைப் பகுப்பாய்வு செய்வது தவறானதல்ல. ■

## இறுதிக் குறிப்புகள் :

**i.** லோ அன்ட் சொஸைட்டி டிரஸ்ட் உதவி ஆய்வாளர்களான பிரபாத் ஹேமந்த குமார, மாலிங்க ஐயரத்ன, இசான் சாமர மற்றும் லக்சான் அபேவர்தன ஆகியோரின் பங்களிப்புக்கள் பெரிதும் மெச்சப்படுகின்றன. பண்டாரவளையிலும் வெலிவேரியவிலும் அசங்க பெரேராவும் சுரேஸ் பெரேராவும் வழங்கிய உதவிக்காகவும் ஆசிரியர் நன்றி தெரிவிக்க விரும்புகிறார்.

**ii.** விதுர பிரபாத் லோ அன்ட் சொஸைட்டி டிரஸ்டில் சிரேஸ்ட ஆய்வாளராவார்.

**iii.** எல்பிடிய பிரதேச சபைக்கு ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னனியினால் சமர்ப்பிக்கப்பட்ட வேட்பு மனுக்கள் தொழில்நுட்பக் காரணங்களினால் நிராகரிக்கப்பட்டன. தேர்தல் ஆணைக்குழுவின் தீர்மானத்திற்கெதிராக உயர்நீதிமன்றத்தில் கட்சியினால் மனு ஒன்று தாக்கல் செய்யப்பட்டது. மனுவின் விசாரணை முடியும் வரை பிரதேச சபையில் தேர்தலை நடத்துவதை இடைநிறுத்தி வைக்கும் கட்டளையினை உயர் நீதிமன்றம் விதித்தது.

**iv.** உள்ளூராட்சித் தேர்தல் நடத்தப்பட்ட 366 அமைப்புக்களில் 231 அமைப்புக்களிலே SLPP பாரிய வெற்றியீட்டிய அதேவேளை பிரதமர் தலைவராக இருக்கும் UNP 34 அமைப்புக்களில் தனித்து வெற்றியீட்டியது. ஜனாதிபதி தலைவராக இருக்கும் UPFA மற்றும் அதன் கூட்டணி முறையே 2 அமைப்புக்களிலும் 7 அமைப்புக்களிலும் பெரும்பான்மை ஆசனங்களைப் பெற்றுக்கொண்டது. (எவ்வாறாயினும் அரசியல் கட்சிகளுக்கிடையிலான தேர்தலுக்குப் பின்னரான தரகுச் செயன்முறை காரணமாக எந்தவொரு அரசியல் கட்சியும் பெரும்பான்மையினைப் பெற்றிராத உள்ளூராட்சி அதிகார சபைகளில் சாத்தியமற்ற சேர்க்கைகள் காரணமாக அதிகாரச் சமனிலை மாறலாம் (வடக்கு மற்றும் கிழக்கு உள்ளடங்கலாக)).

**v.** உமா ஓயா பல்நோக்குக் கருத்திட்டத்தின் கீழ் நீர்மின்சார ஆலைக்காக 3.335 கிலோ மீற்றர் நீளமான சுரங்கம் தோண்டும் பணிகள் 2014 டிசம்பரில் ஆரம்பித்தன. சில நாட்களின் பின்னர் நிலக்கீழ் நீர் சுரங்கத்தினுள் கசியத் தொடங்கியது. இதன் விளைவாக சுரங்க மேற்பரப்பிலிருந்த 7000ற்கும் மேற்பட்ட வீடுகள் சேதமடைந்ததுடன் பாரிய அளவிலான பயிர்ச்செய்கை நிலப் பரப்புக்களின் நிலக்கீழ் நீரும் வற்றிவிட்டது. சடுதியான இந்த அழிவுகளின் காரணமாகப் பொது மக்கள் ஆர்ப்பாட்டம் மேற்கொண்டதுடன் மக்கள் விடுதலை முன்னனியின் தலைமையின் கீழ் "அழிவு தரும் உமா ஓய கருத்திட்டத்திற்கெதிரான மக்கள் முன்னணி" எனும் ஒரு குடை அமைப்பின் கீழ் மக்கள் ஒன்றுதிரண்டனர்.

**vi.** 2014 ஆம் ஆண்டு ஜூன் மாதம் சிங்கள பௌத்தர்களின் குழு ஒன்று திட்டமிட்ட முறையில் அளுத்கம தர்காநகரில் முஸ்லிம்கள் மீது தாக்குதல் நடத்தியது. சிங்கள் பௌத்த அடிப்படைவாதக் குழுவான பொதுபலசேனாவின் மீது முஸ்லிம்களுக்கெதிராக வன்முறையினைத் தூண்டியதாகவும்

வெறுப்புக்களைப் பரப்பியதாகவும் குற்றம் சாட்டப்பட்டது. அப்போதைய அரசாங்கத்தின் மீது பொதுபலசேனா தலைவர்களைப் பாதுகாத்ததாகவும் வன்முறையினை முடிவுக்குக் கொண்டுவர உரிய நடவடிக்கை எடுக்கவில்லை என்றும் குற்றம் சுமத்தப்பட்டது. முஸ்லிம்களுக்குச் சொந்தமான நூற்றுக்கணக்கான சொத்துக்கள் அழிக்கப்பட்டதுடன் மூன்று பேர் காடையர்களினால் கொல்லப்பட்டனர்.

**vii.** 2010 ஆம் ஆண்டு பாணம மற்றும் சாஸ்திரவெல வட்டாரங்களைச் சேர்ந்த ரகம்வெல்ல, உல்லெஸ்ஸ, கங்கேதென்ன, எகொடதென்ன ஆகிய கிராமங்களைச் சேர்ந்த 350 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் 40 வருடத்திற்கும் மேலாக அவர்கள் பயிர் செய்து வந்த காணிகளில் இருந்து பலவந்தமாக வெளியேற்றப்பட்டனர். இக்காணிகள் இராணுவ நிறுவனம் ஒன்றினை அமைப்பதற்காகப் பெறப்பட்டன. பின்னர் இராணுவம் காணியின் பயன்பாட்டினை “தேசிய பாதுகாப்பு” என்பதிலிருந்து மாற்றி அதன் கட்டுப்பாட்டின் கீழ் சுற்றுலா மேம்பாட்டிற்காகப் பயன்படுத்த ஆரம்பித்தது. பாணம மேற்கு, பாணம மத்தி, பாணம வடக்கு, பாணம தெற்கு மற்றும் சாஸ்திரவெல வட்டாரத்தினைச் சேர்ந்த மக்களே இக்காணிகளில் பயிர்செய்து வந்தனர். இம்மக்களால் உருவாக்கப்பட்ட “பாணம்பத்துவவினைப் பாதுகாப்பதற்கான இயக்கம்” எனும் இயக்கத்தினால் நீண்ட எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன.

**viii.** ஹெய்லீஸ் குழுமத்திற்குச் சொந்தமான இறப்பர் கையுறை தயாரிக்கும் கம்பனியின் இரசாயனக் கழிவுகளின் காரணமாக வெலிவேரிய – ரதுபஸ்வல பிரதேசங்களில் உள்ள 28 கிராமசேவையாளர் பிரிவுகளில் நிலக்கீழ் நீர் மாசடைந்திருப்பது வெளிப்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து அப்பிரதேசத்திலிருந்து தொழிற்சாலையினை அகற்ற வேண்டுமென்றும் தூயநீர் வழங்கப்பட வேண்டும் என்றும் கோரி “சியன சுற்றாடல் பாதுகாப்பு இயக்கத்தினை” மக்கள் ஒழுங்கமைத்தனர். 2013 ஆகஸ்ட் முதலாம் திகதி இயக்கத்தின் ஆர்ப்பாட்டங்களில் ஒன்றின்மீது இராணுவத்தினர் தாக்குதல் நடத்தி மூன்று இளைஞர்களைக் கொன்று 50 இற்கும் மேற்பட்டோரைக் காயப்படுத்தினர்.

**ix.** “SLPP’s first local government election rally in A’Pura” Daily News 24 October 2017> http://www.dailynews.lk/2017/10/24/local/132223/slpp%E2%80%99s-first-local-government-election-rally-%E2%80%99pura.

**x.** சில பிரதேசங்களில் அவர்கள் SLFP ஆகவும் வேறு சில இடங்களில் UPFA ஆகவும் போட்டியிட்டனர்.

**xi.** 'Massive crowd present at the inaugural rally of the series" Daily News 11 January 2018 http://www.dailynews.lk/2018/01/11/political/139630/massive-crowd-present-inaugural-rally-series.

**xii.** “UNP to launch election campaign today” Daily News 18 January 2018 http://www.dailynews.lk/2018/01/18/political/140316/unp-launch-election-campaign-today.

**xiii.** எல்ல பிரதேச சபையில் ஆட்சியினைப் பிடிக்க SLP விட UNP 152 அதிக வாக்குகள் பெற்றது.

**xiv.** நேர்காணல் திகதி 10.03.2018.

**xv.** Ibid.

**xvi.** நேர்காணல் திகதி 10.03.2018.

**xvii.** நேர்காணல் திகதி 10.03.2018.

**xviii.** பண்டாரவளை நகரசபை 2011 இல் மாநகர சபையாக ஆக்கப்பட்டது.

**xix.** 2010 ஜனாதிபதி தேர்தல் பிரச்சாரத்தில் நளின் சூரியகே மஹிந்தவிற்கு ஆதரவு வழங்குவதற்காக UNP இலிருந்து கட்சி மாறினார். பின்னர் அவர் முன்னாள் ஜனாதிபதியின் உறுதியான ஆதரவாளராக இருந்து வருகின்றார்.

**xx.** நேர்காணல் திகதி 10.03.2018.

**xxi.** JVP தலைவர் பங்குபற்றிய பிரதான கூட்டம் பண்டாரவளை நகரத்தில் நடக்கவில்லை. ஆனால் எல்ல பிரதேச சபையில் பல்லகட்டுவவில் நடைபெற்றது. JVP அதன் சின்னத்தின் கீழ் போட்டியிட்டது.

**xxii.** பண்டாரவளை பிரதேசசபைத் தேர்தல் முடிவுகள்:

| கட்சியின் பெயர் | வாக்குகளின் எண்ணிக்கை |
|---|---|
| சிறிலங்கா பொதுஜன பெரமுன | 9, 509 |
| ஐக்கிய தேசிய கட்சி | 7, 148 |
| ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி | 4, 476 |
| சுயேட்சைக் குழு 1 | 3, 319 |
| சுயேட்சைக் குழு 2 | 1, 943 |

**xxiii.** நேர்காணல் திகதி 10/03/2018.

**xxiv.** நேர்காணல் திகதி 26/02/2018.

**xxv.** நேர்காணல் திகதி 15/03/2018.

**xxvi.** நேர்காணல் திகதி 09/03/2018.

**xxvii.** நேர்காணல் திகதி 10/03/2018.

**xxviii.** நேர்காணல் திகதி 15/03/2018.

**xxix.** நேர்காணல் திகதி 27/02/2018.

**xxx.** நேர்காணல் திகதி 16/03/2018.

**xxxi.** நேர்காணல் திகதி 08/03/2018.

**xxxii.** “Speaker signs LG Polls (Amended) Act” Daily Mirror 12 October 2017 http://www.dailymirror.lk/article/Speaker-signs-LG-Polls-Amendment-Act-138333.html.

❝

மஹிந்த மஹாதயா அறிவுறுத்திய காரணத்தினால்தான் தொழிற்சாலையை வேறு இடத்திற்கு மாற்ற வேண்டியிருந்தது (கையுறை தயாரிக்கும் தொழிற்சாலை). இல்லாவிட்டால் அது மாற்றப்பட்டிருக்காது. நாம் தாக்கப்பட்டோம். ஆனால், பின்னர் ராஜபக்ஷதான் அதற்கு பொறுப்பானவர்.

**- வெலிவேரிய கிராமத்தவர்கள்.**